## IN THE COURT OF COMMERCIAL COURT (DISTRICT JUDGE CADRE), COIMBATORE

COS.No. 18 of 2024

09.10.2025

DW2–Subramaniam

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வாதி நிறுவனமான முருகன் பவுண்டரி நிறுவனத்தை எனக்கு 30 ஆண்டுகளாக தெரியும்.

வாதி நிறுவனத்தை பிரதிவாதி நிறுவனத்திற்கு வாதி நிறுவனம் நன்றாக எந்திரங்களை வழங்குவார்கள் என்று நீங்கள் தான் பரிந்துரை செய்தீர்கள் என்று சொன்னால் இல்லை.

பிரதிவாதி நிறுவனத்தை உங்களுக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும், பிரதிவாதி நிறுவனம் உங்களுக்கு எவ்வாறு தெரியவந்தது, யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது என்றால் பிரதிவாதி நிறுவனத்தை எனக்கு யாரும் அறிமுகம் செய்யவில்லை, அவர்களாக தான் என்னிடம் வந்து கேட்டார்கள்.

குறிப்பாக வாதி நிறுவனத்தை பிரதிவாதி நிறுவனத்திற்கு அறிமுகம் செய்து வைக்கக் காரணம் என்ன என்றால் வாதி நிறுவனம் தங்களுடைய technology களை ஜெர்மனி நாட்டு நிறுவனத்துடன் collaboration வாயிலாக பெற்றுள்ளதாக தெரிவித்தார்கள், எனவே பரிந்துரைத்தேன்.

பிரதிவாதி நிறுவனம் என்ன எந்திரங்கள் வேண்டும் என்று கேட்டார்கள், வாதி நிறுவனத்திடம் என்ன எந்திரங்களை வாங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டது என்பது உங்களுக்கு ஆரம்பம் முதலே தெரியும்

என்று சொன்னால் குறிப்பிட்ட எந்திரங்கள் தான் வாங்க வேண்டும் என்று நான் பரிந்துரை எதுவும் செய்யவில்லை.

வாதி நிறுவனம் தவிர இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எந்திரங்கள் உங்களுக்கு தெரிந்து வேறு எத்தனை நிறுவனங்கள் இதுபோன்ற எந்திரங்களை இந்தியாவில் தயார் செய்கிறார்கள் என்றால் சுமார் 4, 5 நிறுவனங்கள் உள்ளது.

வாதி நிறுவனத்திடம் இருந்து எந்திரங்கள் வாங்குவதற்கு நீங்கள் இதுவரை எத்தனை நபர்களுக்கு பரிந்துரை செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சுமார் பத்து நபர்களுக்கு பரிந்துரை செய்துள்ளேன்.

வாதி நிறுவனத்தை நிர்வகிப்பவர்கள் யாரும் உங்களுடைய உறவினர்கள் இல்லை என்று சொன்னால் சரிதான்.

வாதி நிறுவனத்தில் இருந்து உங்களுடைய பரிந்துரையின் பெயரில் யாரேனும் எந்திரங்கள் வாங்கினால் உங்களுக்கு கமிஷன் தொகை வழங்கப்படும் என்று சொன்னால் அப்படி கிடையாது.

பிரதிவாதி நிறுவனத்திற்கு வாதி நிறுவனத்திலிருந்து எந்திரங்கள் வாங்கியதற்காக கமிஷன் தொகை நீங்கள் எவ்வளவு வாங்கி உள்ளீர்கள் என்று சொன்னால் நான் கமிஷன் எதுவும் வாங்கவில்லை.

உங்களுக்கு கோவையில் எந்தெந்த வங்கிகளில் வங்கி கணக்கு உள்ளது என்று சொன்னால் எந்த வங்கியிலும் இல்லை.

Account No.800210100000200 என்ற வங்கி கணக்கானது உங்களுடைய வங்கி கணக்கா என்றால் சரிதான், இது என்னுடைய வங்கி கணக்கு தான்.

இது எந்த ஊரில் உள்ள எந்த வங்கியின் வங்கி கணக்கு என்றால் சென்னை மயிலாப்பூரில் உள்ள Bank of India வங்கியின் வங்கி கணக்காகும்.

உங்களால் உங்கள் பெயரில் உள்ள மேற்கண்ட கணக்கு எண் கொண்ட வங்கி கணக்கு அறிக்கையினை இவ்வழக்கில் தாக்கல் செய்ய முடியும் என்று சொன்னால் தாக்கல் செய்ய முடியும்.

25.03.2021 தேதியில் உங்களுடைய வங்கிக் கணக்கிற்கு 3 லட்சம் ரூபாய் காசோலை 1029087 மூலமாக வரவு வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை, அது தவறானது, வாதி நிறுவனத்திற்கும் எனக்கும் பிரதிவாதி நிறுவனத்தில் நான் சேர்வதற்கு முன்பாக சில பரிவர்த்தனைகள் இருந்தது.

08.02.2022 தேதியில் வாதி நிறுவன வங்கி கணக்கில் இருந்து உங்களுடைய வங்கி கணக்கிற்கு ரூபாய் ஒரு லட்சம் அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி தெரியாது.

07.03.2022 தேதியில் வாதி நிறுவன வங்கி கணக்கில் இருந்து உங்களுடைய வங்கி கணக்கிற்கு ரூபாய் ஒரு லட்சம் அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி தெரியாது.

09.02.2022 தேதியில் வாதி நிறுவன கூட்டாளிகளில் ஒருவரான முருகையனின் மனைவி தீபா என்பவரது வங்கி கணக்கில் இருந்து உங்களுடைய வங்கி கணக்கிற்கு ரூபாய் ஒரு லட்சம் அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி தெரியாது, ஞாபகம் இல்லை.

08.02.2022 இல் ரூபாய் இரண்டு லட்சமும், 07.03.2022 இல் ஒரு லட்சமும், 25.03.2021 இல் மூன்று லட்சமும் உங்களுடைய வங்கிக்

கணக்கிற்கு வாதி நிறுவன வங்கி கணக்கில் இருந்து அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் ஞாபகம் இல்லை.

கடந்த 2021 முதல் 2022 ஆம் ஆண்டு வரை சுமார் ரூபாய் 6 லட்சம் உங்களுடைய வங்கி கணக்கிற்கு வாதி நிறுவனத்தால் அனுப்பப்பட்டுள்ளது, அவ்வாறு அவ்வளவு தொகை அனுப்ப வேண்டிய அவசியம் என்ன என்று சொன்னால் நான் கோவில் கட்டி வந்தேன், அந்த கோவில் கட்டுவதற்கு கட்டுமான பணிகளுக்காக நன்கொடை வாங்கி வந்தேன், கோவில் கணக்கில் அனுப்பினால் வருமான வரி கணக்கில் காட்ட முடியாது என்பதற்காக என்னுடைய வங்கி கணக்கிற்கு தொகையை அனுப்பி வைத்தார்கள்.

சிவன் கோவில் என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள், அந்த கோவில் அறங்காவலர் நீங்களா என்றால் நான் அறங்காவலர் இல்லை, என் மகன் தான் அந்த கோவில் நிர்வாகத்தின் Trustee ஆக உள்ளார்.

மேற்கண்ட 6 லட்ச ரூபாய் உங்களுடைய வங்கிக் கணக்கில் வரவு வைத்தது போக வாதி நிறுவனத்தில் இருந்து ரொக்கப் பணமாக எவ்வளவு தொகை 2021 முதல் 2023 வரை வாங்கி உள்ளீர்கள் என்று சொன்னால் ரொக்கமாக ஒரு பைசாவும் நான் வாங்கவில்லை.

பிரதிவாதி நிறுவனத்தில் வாதி நிறுவனம் உங்களுக்கு ஆறு லட்ச ரூபாய் வரை தொகை தந்துள்ளது என்பதை பிரதிவாதி நிறுவனத்தில் நீங்கள் ஆலோசகராக சென்று பணியில் சேரும்போது தெரிவித்தீர்களா என்று சொன்னால் தெரிவித்தேன்.

எழுத்துப்பூர்வமாக தெரிவித்தீர்களா என்றால் இல்லை, வாய்மொழியாக தெரிவித்தேன்.

பிப்ரவரி 2021 ஆம் ஆண்டு பிரதிவாதி நிறுவனத்திலிருந்து பிரதிவாதி நிறுவன ஆலோசனை சொல்லும் பொறுப்பிலிருந்து விலகி விட்டதாக முதல் விசாரணையில் தெரிவித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

அதன் பின்னிட்டு ஜூலை மாதம் 2022 இல் சென்று தான் பிரதிவாதி நிறுவனத்தில் நீங்கள் ஆலோசகராக சென்று பணியை தொடங்கினீர்கள் என்று சொன்னால் சரிதான்.

நீங்கள் வாதி நிறுவனத்தில் இருந்து ஆறு லட்ச ரூபாய் தொகை உங்கள் வங்கி கணக்கில் பெற்றுக் கொண்ட காலமானது பிரதிவாதி நிறுவனத்திலிருந்து வாதி நிறுவனத்திற்கு எந்திரங்கள் வாங்குவதற்காக purchase order வழங்குவதற்கும் வாதி நிறுவனத்தில் இருந்து பிரதிவாதி நிறுவனத்திற்கு எந்திரங்கள் அனுப்பி வைக்கப்படும் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் என்று சொன்னால் சரியல்ல, நான் ஒப்புக் கொள்வதற்கு இல்லை.

வாதி நிறுவனத்தில் இருந்து பிரதிவாதி நிறுவனத்திற்கு எந்திரங்கள் வாங்குவதற்காக எந்திரங்களின் விற்பனைத் தொகையிலிருந்து ஐந்து சதவீத தொகையினை உங்களுடைய கமிஷனாக வாதி நிறுவனத்தில் இருந்து நீங்கள் பேசி அதற்கு ரூபாய் 10 லட்சம் ஆக தெரிவித்து இருந்தீர்கள் என்று சொன்னால் இது பொய்யானது. (மேற்கண்ட கேள்வி சம்பந்தமாக குறிப்பிட்ட வாதுரை இல்லை என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது, ஆட்சேபனைக்குட்பட்டு இந்த கேள்வியானது பதிவு செய்யப்பட்டது, ஆட்சேபனை குறித்து வழக்கின் இறுதியில் தீர்மானிக்க முடிவு செய்து கேள்வியானது பதிவு செய்யப்பட்டது.)

நீங்கள் வாதி நிறுவனத்திடம் பத்து லட்ச ரூபாய் கமிஷன் தொகையாக பேசி அதில் ஆறு லட்சம் மட்டுமே உங்களுக்கு வாதி நிறுவனத்தால் செலுத்தப்பட்டிருந்த நிலையில் பாக்கி தொகை வரவில்லை என்ற காரணத்திற்காக பிரதிவாதி நிறுவனத்திற்கு ஆதரவாக செயல்பட்டு அந்த நிறுவனத்திற்கு ஏற்றவாறு நீங்கள் அறிக்கைகள் தயார் செய்து கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல, இது பொய்யானது.

Ex.B.4 தயாரிக்கப்பட்ட தேதி 09.01.2025 என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அது தவிர அந்த அறிக்கையில் இரண்டு பக்கங்களில் வெற்று பக்கங்களுடன் அந்த தாளில் இடைவெளி விட்டு கையொப்பமிடப்பட்டதாகக் காணப்படுகிறது என்று சொன்னால் என்னுடைய கையெழுத்து எதுவும் அதில் இடம்பெறவில்லை.

நீங்கள் Ex.B.4 ஆவணத்தில் எந்த பக்கத்திலும் உங்களுடைய கையெழுத்து இல்லை என்று தெரிவிக்கிறீர்களா என்றால்(Ex.B.4 ஆவணம் சாட்சியிலும் காண்பிக்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தை ஒவ்வொரு பக்கங்களையும் சரிபார்த்தார், சரி பார்த்துவிட்டு) சரிதான், என்னுடைய கையொப்பம் இல்லை என்று தெரிவித்தார்.

Ex.B.4 ஆவணத்தை நீங்கள் தயாரிக்கவில்லை என்று கூறுகிறீர்களா என்று சொன்னால் கையொப்பம் இடாமல் இருப்பதற்கும், தயாரிக்கவில்லை என்பதற்கும் வித்தியாசம் உள்ளது.

Ex.B.4 உங்களால் தயார் செய்யப்பட்டதா, இல்லையா என்றால் இந்த ஆவணம் தயார் செய்யப்படுவதில் நானும் பங்கெடுத்தேன்.

Ex.B.4 ஆவணத்தில் உள்ள விபரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும்.

Ex.B.4 ஆவணம் எந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு தயார் செய்யப்பட்டதுஎன்று சொன்னால் 2021 ஆண்டு முதல் நடந்த ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களான Purchase order, Minutes of Meeting, E-mail correspondence ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது.

MOM Ex.B.12 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அந்த ஆவணத்தில் யார் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என காட்டிக் கேட்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தின் ஒவ்வொரு பக்கங்களையும் பார்த்தார், பார்த்துவிட்டு அதில் நான், அன்புராஜ், எனது நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளோம் என தெரிவித்தார்.

உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

<u>உணவு இடைவேளைக்கு பின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

வாதி பிரதிவாதிகளுக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டவுடன் நாங்கள் தான் பிரதிவாதி நிறுவனத்தை வாதி நிறுவனத்திற்கு அறிமுகம் செய்து வைத்த நபர் என்பதால் இரு நிறுவனங்களுக்கு இடையே நான் சென்று பேச்சுவார்த்தை நடத்துகிறேன் என்று நீங்கள் ஏதேனும் முயற்சித்தீர்களா என்றால் இல்லை.

சாதாரணமாக 2 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இந்த இயந்திரங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அந்த எந்திரங்களின் மதிப்பீடு எத்தனை சதவீத அளவிற்கு தேய்மான காரணங்களால் குறையும் என்றால் எனக்கு தெரியாது.

பொதுவாக ஒரு எந்திரத்தின் ஆண்டு தேய்மான அளவு எவ்வளவு ஏற்படும், அதனால் அந்த எந்திரத்தின் மதிப்பீடானது எவ்வளவு தொகை அளவிற்கு அல்லது எத்தனை சதவீத அளவிற்கு குறையும் என்று உங்களால் கூற முடியாது என்று சொன்னால் சரி, கூற முடியாது.

ஒரு எந்திரத்தின் தேய்மான அளவானது அந்த எந்திரத்தின் டெக்னாலஜி அடிப்படையில் சேர்ந்ததா என்றால் இல்லை, அது ஒரு நாளைக்கு அந்த எந்திரம் எவ்வளவு மணி நேரம் ஓடுகிறது, எவ்வாறு கையாளப்படுகிறது என்பதை பொறுத்து வரக்கூடியது.

பிரதிவாதி நிறுவனத்தில் உங்களுக்கு உங்களுடைய பணிகளுக்கான கட்டணம் எவ்வாறு வழங்கப்படுகிறது என்று சொன்னால் நான் ஒவ்வொரு மாதமும் என்னுடைய பணிகளுக்கான தொகையை நான் claim செய்வேன், அவர்கள் செட்டில் செய்து விடுவார்கள்.

கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பிரதிவாதி நிறுவனத்தில் இருந்து claim தொகையாக நீங்கள் இதுவரை எவ்வளவு தொகை பெற்றுள்ளீர்கள் என்று உங்களால் கூற முடியுமா என்றால் சுமார் 40 லட்ச ரூபாய் பெற்றுள்ளேன்.

Ex.B.7 ஆவணத்தை முதன் முதலில் நீதிமன்றத்தில் பார்த்தீர்களா அல்லது இதற்கு முன்னர் பார்த்திருக்கிறீர்களா என்றால் இதற்கு முன்னரே பார்த்திருக்கிறேன், அதில் நான் கையொப்பமிட்டுள்ளேன்.

Ex.B.7 ஆவணத்தில் இடம்பெற்றுள்ள கையெழுத்தானது திரு முருகையனுடைய கையெழுத்தே இல்லை என்று சொன்னால் சரியல்ல, அவருடையது தான்.

பிரதிவாதி நிறுவனத்திற்குரிய பணிகளை நிறைவு செய்ய வெளி சந்தையில் இருந்து உதிரி பாகங்கள் பெற்று வேறு நிறுவனத்தைக் கொண்டு பணிகளை முடித்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள், அவ்வாறு வேறு நிறுவனம் என்று நீங்கள் குறிப்பிட்டுள்ள நிறுவனமானது எந்த நிறுவனம் என்றால் குறிப்பிட்டுக் கூற முடியாது, பல நிறுவனங்கள் அதில் ஈடுபட்டுள்ளது.

பிரதிவாதி நிறுவனத்திற்கான project நிறைவு செய்ய வாதி நிறுவனம் தவிர வேறு எத்தனை நிறுவனங்கள் இணைந்து அல்லது தனியாக செயல்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை.

நீங்கள் பிரதிவாதி நிறுவனத்திற்கு அதற்கான ஆலோசனைகளை வழங்கவில்லையா என்றால் நான் அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கி வந்துள்ளேன்.

பிரதிவாதி நிறுவனம் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இவ்வழக்கில் என்னென்ன தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா என்றால் எனக்கு அனைத்து ஆவணங்களை பற்றியும் தெரியாது, நான் சம்பந்தப்பட்ட plant மற்றும் technicality சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தான் எனக்கு தெரியும்.

வாதி நிறுவனத்தால் பிரதிவாதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட எந்திரங்கள் எதுவும் குறைபாடுடைய எந்திரங்கள் அல்ல, வாதி நிறுவனத்தில் இருந்து பிரதிவாதி நிறுவனத்திற்கு எந்திரங்கள் சரியாக அனுப்பப்பட்டு முறையாக நிறுவப்பட்டுள்ளது, வாதி நிறுவனத்தில் அனுப்பப்பட்ட எந்திரங்கள் பொறுத்து நீங்கள் தவறான தகவல்களை வழங்கி உள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

எந்திரங்களுக்காக வாங்கப்பட்ட சில உதிரி பாகங்கள் மற்றும் அந்த எந்திரங்கள் பயன்பாட்டில் ஏற்படக்கூடிய தேய்மானங்களை சரி செய்வதற்காக செய்யப்பட்ட பணிகளுக்காகவும் ஏற்படுத்தப்பட்ட இன்வாய்ஸ்களை மிகைப்படுத்தி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி நிறுவனத்தில் இருந்து அனுகூலம் கிடைக்கிறது என்பதற்காக பிரதிவாதிகளுக்கு ஆதரவாகவும், வாதி நிறுவனத்தில் இருந்து உங்களுக்கு சேர வேண்டிய கமிஷன் தொகையாக நான்கு லட்சம் கிடைக்கவில்லை என்று ஆதங்கத்தில் பிரதிவாதி நிறுவனத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

கமிஷன் பெற்ற தொகைக்காக, கோவிலுக்காக நீங்கள் வாதி நிறுவனத்தில் இருந்து நன்கொடைகள் பெற்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/–K.Hariharan

Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.